உமறுப்புலவர்
தமிழ்மொழி நிலையம்
UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE

# பயணம்

மாணவர் இதழ்

மார்ச் 2016



**தொடர்புக்கு:**

✍ 2, பீட்டி சாலை,
சிங்கப்பூர் 209954

✆ 62980781

**இணையப் பக்கம்:**
www.uptlc.moe.edu.sg


புதிது **பயணம்** முன் இதழ்கள்

## உள்ளே...



| உள்ளே... | |
|---|---|
| ஆசிரியர் பக்கம் | 1 |
| தாத்தாவும் பேரனும் | 1 |
| படிப்பது எப்படி? | 1 |
| அழகுதமிழ் அறிவோம்! | 1 |
| கட்டுரைகள் | 2, 3 |
| கவிதைகள் | 2, 3 |
| சிறுகதைகள் | 1, 2 |
| படித்ததில் பிடித்தது | 2 |
| பேஸ்புக் செய்தி | 3 |
| உங்களுக்குத் தெரியுமா? | 3 |



## முக்கிய நிகழ்வுகள்

- தமிழ்த் தட்டச்சுப் பயிற்சி
  *1 & 3 மார்ச்*
- முதல் பருவ விடுமுறை
  *12 - 20 மார்ச்*
- கேட்டல் & வாய்மொழித் தேர்வுகள்
  *21 - 24 மார்ச்*

## ஆசிரியர் பக்கம்...

வணக்கம்!
**'பயணம்'** மாணவர் இதழ் புதிய பரிணாமங்களில் மாதந்தோறும் உங்களோடு பயணம் செய்கிறது.

இம்மாத இதழில் மாணவர்களின் படைப்புகள் பல கதை, கட்டுரை, கவிதை என்ற வடிவங்களில் முகங்காட்டியுள்ளன.

கற்பனை வளம் மிக்க மாணவர்களின் படைப்புகள் என்னைக் கவர்ந்ததுபோல் நிச்சயம் உங்களையும் கவரும்.

உங்கள் படைப்புகளும் இடம்பெற... தரமிகு படைப்புகளை அனுப்புங்கள்!

*இப்படிக்கு...*
இதழ்க் குழு

## தாத்தாவும் பேரனும்

ஓர் அழகான இரவு நேரத்தில் தாத்தாவும் பேரனும் சாலையில் நடந்துகொண்டிருந்தார்கள். அச்சிறுவன் அங்கும் இங்கும், மேலும் கீழும் பார்த்துக்கொண்டே வந்தான். மேலே பார்க்கும்போது, அவன் வானத்தில் உள்ள நட்சத்திரங்களையும், சந்திரனையும் பார்த்தான். பிறகு, கீழுள்ள செடிகொடிகளைப் பார்த்தான். சிறிது நேரம் அவன் இவற்றையெல்லாம் உற்றுப் பார்த்துக் கொண்டே நடந்தான். தாத்தாவும் இதனைக் கவனித்தார்.

சில நிமிட சிந்தனைக்குப் பிறகு, பேரன் தாத்தாவிடம் வினவத் தொடங்கினான். "தாத்தா, அதோ பாருங்கள்! மேலுள்ள நட்சத்திரங்களும், கீழுள்ள செடிகளும் நம்முடன் சேர்ந்தே நடக்கின்றன." என்று உற்சாகத்தோடு கூறினான். தாத்தாவும் சிரித்துக்கொண்டே ... தாத்தா "கண்ணா, இப்போது நான் கூறுவதை நன்கு கவனித்து எனக்குப் பதிலளி." பார்க்கலாம் என்றார்.

"முதலில், மேலே வானத்தைப் பார்! அங்குள்ள நட்சத்திரங்களும் நிலாவும் எந்தப் பக்கம் நகர்கின்றன? முன்னாடியா? பின்னாடியா?" அதற்குப் பேரன், " இல்லை, தாத்தா அவை நான் எங்கு சென்றாலும் என் கூடவே நகர்கின்றன." என்று பதிலளித்தான். அதுமட்டுமல்ல, அவன் முன்பும் பின்பும் நடந்துகூடக் காட்டினான். "சரி, இப்போது நீ கீழுள்ள செடிகளைப் பார். அவை எந்தப் பக்கம் நகர்கின்றன?"

"ம்ம்ம், செடிகள் பின்னாடி நகர்கின்றன. ஏன் தாத்தா இதைக் கேட்கிறீர்கள்?" என்றான் பேரன். அதற்கு, தாத்தா "இருப்பா, நான் கூறுகிறேன்." என்றார். பேரனும் தாத்தா என்ன சொல்லப் போகிறாரோ? என்று ஆவலுடன் காத்திருந்தான்.

தாத்தா பேரனிடம், "தம்பி, மேலுள்ள நட்சத்திரங்களும் சந்திரனும் உனது வாழ்க்கையில் உள்ள உயர்வான மனிதர்கள் போல. அவர்கள் உனது சந்தோஷத்திலும் துன்பத்திலும் கூடவே இருந்து துணை நிற்பார்கள். ஆனால், கீழுள்ள செடிகொடிகள் உனது வாழ்க்கையில் உள்ள எதிரிகள் அல்லது உனது வெற்றியை விரும்பாதவகள் போல. அவர்கள் உன்னுடன் வருவது போலத் தெரியும். ஆனால், உண்மையில் அவர்கள் உன்னை விட்டு விலகி உனக்குத் துரோகம்தான் செய்வார்கள்." என்று கூறினார். பேரனும் அமைதியாகக் கவனித்துக் கொண்டிருந்தான். "எனவே, நீ யார்? உண்மையான ஆதரவாளர்கள் யார்? பொம்மலாட்டக்காரர்கள் யார்? என்று அறிந்து நீ புத்திசாலித்தனமாகச் செயல்பட வேண்டும்." என்றார். "ஓ!!" என்று பேரன் வாயைப் பிளந்தான்.

***வர்ஷினி, 3HT***

## பொன்மொழி

வெற்றிக்காகக் காத்திருக்காதே!
உன் அர்ப்பணிப்பு உண்மையாக இருந்தால்
வெற்றி உனக்காகக் காத்திருக்கும்!

## படிப்பது எப்படி?

**படித்தனவற்றை எழுதிப் பார்க்க வேண்டும்.**

**வினாவுக்கு ஏற்ற விடையை எழுத வேண்டும்**

**குறித்த காலத்திற்குள் விடையெழுதப் பழகவும்.**

தொடரும்..

## அழகுதமிழ் அறிவோம்!

| | |
|---|---|
| Identity Card | அடையாள அட்டை |
| Passport | கடவுச்சீட்டு |

படைப்புகள் வரவேற்கப்படுகின்றன!

## இன்றைய இளையர்கள் குறைவான நேரத்தையே தங்கள் குடும்பத்தினருடன் கழிக்கின்றனர் – கருத்துரைக்க.

'கல்வி கண் போன்றது' என்பர். அதனால், இளையர்கள் பெரும்பாலான நேரத்தைக் கல்விக் கூடங்களிலேயே செலவிடுகின்றனர். இன்றைய இளையர்கள் பரபரப்பான வாழ்க்கைச் சூழலிலும் கல்வி, கலை, போன்ற துறைகளில் முன்னேற்றம் அடைந்து வருகின்றனர். ஆயினும், குடும்பத்தினருடன் செலவழிக்கும் நேரத்தை அவர்கள் இழந்துவிட்டனர் என்பதை மறுக்க முடியாது. இன்றைய இளையர்கள் குடும்பத்தினருடன் குறைவான நேரத்தைச் செலவிடுவதற்கான காரணங்களையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் பற்றி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

இன்றைய இளையர்கள் கூடுதலான பாடங்கள் படிக்கின்றனர். இத்தகு பாடச்சுமை குடும்பத்தினருடன் செலவிடும் நேரத்தைக் குறைத்துள்ளது. காலை எழுந்தது முதல் இரவு வரை படிப்பதிலும் பள்ளி நடவடிக்கைகளில் பங்கேற்பதிலுமே கழிந்துவிடுகின்றது. மேலும், வார இறுதிகளில்கூட இணைப்பாட நடவடிக்கை, துணைப்பாட வகுப்புகள் என ஓய்வின்றி இயங்குகின்றனர். இந்நிலையில் குடும்பத்தாருடன் அதிக நேரத்தைச் செலவழிப்பது சாத்தியம் ஆகாது. எனவே, பாடச்சுமை இளையர்களின் குடும்ப நேரத்தைக் குறைத்துள்ளது என்பது தெளிவாகின்றது.

இன்றைய உலகம் தொழில்நுட்ப மயமாகிவிட்டது. நாளுக்கு நாள் தொழில்நுட்பச் சாதனங்களின் பெருக்கம் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. மனித வாழ்வைச் சொகுசாக்கும் இத்தொழில்நுட்ப வளர்ச்சி இன்றைய இளையர்கள் குடும்பத்துடன் செலவிடும் நேரத்தை வெகுவாகக் குறைத்துவிட்டது. இளையர்கள் கைத்தொலைபேசிகளை அதிகம் பயன்படுத்திக் குறுஞ்செய்தி, சமூக வளைத்தளப் பதிவுகள் என்று தங்கள் நண்பர்களுடனே அதிக நேரத்தைச் செலவழிக்கின்றனர். மேலும், கணினி வழிச் செய்யப்படும் மின்னியல் பாடங்களும் தொழில்நுட்பக் கருவிகளோடு இளையர்களுக்கு இருக்கும் நெருக்கத்தை அதிகரிக்கின்றன. இதனால், இவைதான் தமது வாழ்க்கைக்கு அடிப்படையான, அத்தியாவசியமான பொருள்கள் என்ற தவறான மனப்போக்கில் இளையர்கள் இருக்கிறார்கள். இதுவே, அவர்கள் குறைவான நேரத்தைத் தங்கள் குடும்பத்தினருடன் செலவழிப்பதற்கான முக்கியக் காரணமாகும்.


நண்பர்கள் "உடுக்கை இழந்தவன் கைபோல" ஆபத்துக்காலதங்களில் உதவிக்கரம் நீட்டுபவர்கள். இன்றைய இளையர்களிடம் நண்பர்களின் செல்வாக்கு அதிகம். மேலும், அவர்கள் நண்பர்களையே மிகுதியும் நம்புகின்றனர். பள்ளியில் இருக்கும் நேரங்களில் மட்டுமல்லாது, வார இறுதிகளிலும் நண்பர்களுடன் சேர்ந்து பொழுதைக் கழிக்கின்றனர். தமது குடும்பத்தினரைவிட, தம்மை நன்கு புரிந்துகொள்பவர்கள் நண்பர்கள் என்ற தவறான மனப்போக்கில் வாழ்கின்றனர். இதனால், இளையர்கள் அதிகமான நேரத்தைக் குடும்ப உறுப்பினர்களிடம் செலவழிப்பதில்லை. இந்நிலையில் தங்கள் குடும்பத்தினர் ஓரங்கட்டப்படுவதையும் அவர்கள் உணரத் தவறிவிடுகின்றனர்.

இளையர்கள் குறைவான நேரத்தைக் குடும்பத்தினருடன் செலவழிப்பதால் பல விளைவுகள் ஏற்படுகின்றன. பாடச்சுமை ஒருபுறம். அதனால் உண்டாகும் மனவுளைச்சல் மறுபுறம். இத்தகு இக்கட்டான நிலையில் இன்றைய இளையர்கள் தத்தளித்துக் கொண்டிருக்கின்றனர். மேலும், குடும்ப உறுப்பினர்களுடன் ஓய்வாக அமந்து பொழுதைக் கழிக்கவில்லையென்றால் கூடுதலான மனவுளைச்சலே ஏற்படும். இதனால், குடும்பப் பிணைப்புப் பாதிக்கப்பட்டுப் புரிந்துணர்வும் குறைந்து போகின்றது. அதுமட்டுமல்லாமல் கருத்து வேறுபாடுகள் போன்ற பல சிக்கல்கள் தோன்றுகின்றன. அதோடு, நண்பர்களை மட்டுமே நம்பி இருக்கும் இளையர்கள் குடும்பத்தினரிடமிருந்து முற்றிலும் விலகிவிடுகின்றனர். இதனால் தீய வழிகளில் செல்லும் அவலநிலை ஏற்படுகின்றது. குடும்பத்திலிருந்து விலகி இருப்பதால், நன்மை எது? தீமை எது? என்பதை அவர்களளால் உணரவும் முடிவதில்லை.

இன்றைய இளையர்கள், 'தீதும் நன்றும் பிறர்தர வாரா' என்னும் பொன்மொழியை உணர்ந்து, செயல்பட வேண்டும். குடும்பத்தின் இன்றியமையாமையை உணர்ந்து, குடும்ப உறுப்பினர்களுடன் அதிக நேரத்தைச் செலவழிப்பதால் ஏற்படும் நன்மைகளையும் அதன் அவசியத்தையும் நன்கறிதல் வேண்டும். அப்போதுதான் இளைய சமுதாயம் ஈடும் எடுப்பும் மிக்க சமுதாயமாகத் திகழும்.

*-சாந்தினி* ***4HT1***

## ஈன்ற தாய்!



விக்கல் எடுத்ததும் மகன்தான் நினைக்கிறான் என்று எண்ணி மகிழ்ந்தாள் கோமதி. அவள் வாழ்க்கையோ ஒரு கவிதை. ஆனால், அவள் இருப்பதோ முதியோர் இல்லத்தில்!

வறுமை, இடப்பற்றாக்குறை, பொருளாதாரப் பிரச்சினை, பணிச்சுமை, இயந்திர வாழ்க்கை இப்படியே அடுக்கிக்கொண்டு போனாலும் ஈன்றதாயை மறப்பதை மன்னிக்க முடியாது. ஆம்! தாய்தான் நமக்கு உயிர்கொடுத்தவள். அப்படிப்பட்ட தாயை மறந்தான் அறிவுச்செல்வன்.

மகனுக்கு இறுதிக்கடிதம் எழுதுகிறாள் தாய் கோமதி. "அன்பு மகனே! உனக்கு ஒரு வேண்டுகோள்! எனக்குக் கொள்ளி வைக்கும் நிலை உனக்கு நேர்ந்தால்... தீயை என் தலையில் வைக்காதே, என் வயிற்றில் வை. உன்னைச் சுமந்த வயிறு முதலில் எரிந்து போகட்டும். இதையாவது நிறைவேற்று!"

கடிதம் மகனுக்குக் கிடைப்பதற்கும் கோமதியின் மரணச் செய்தி வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது. அறிவுச்செல்வன் தாயின் இறுதிச் சடங்கிற்கு அமேரிக்காவிலிருந்து புறப்பட்டான். அவன் வருகைக்காகக் காத்திருந்த அக்கம் பக்கத்தாரிடையே பரபரப்பும்...அமைதியும்... அறிவுச்செல்வன் வந்து இறங்கிவிட்டான்.

தாயின் இறுதி ஊர்வலத்திற்குச் சுற்றத்தினர் அனைவரும் வந்திருந்திருந்தனர். அனைவர் கையிலும் மாலை; முகங்களில் சோகம். உறவின் பலம், உணர்வின் வெளிப்பாடு, பண்பாட்டின் அடையாளம் எனப் பற்பல அர்த்தங்கள் அவனுக்கு அப்போதுதான் புரியத்தொடங்கியது. அவனிடம் பலரும் பலவற்றைக் கேட்டனர். அவன், "என்னைப் பெற்றவளுக்கு இறுதிக்கடன் செய்யத்தான் வந்தேன். என் கடன் அனைத்தையும் அவள் செய்தாள். அவளுக்குச் செய்ய வேண்டிய கடமையைக்கூட மறந்துவிட்டேன் என்று நாதமுதழுக்கக் கூறினான்.

அந்த நேரத்தில், கோமதிக்கு வேண்டிய உறவினர் ஒருவர், முதியோர் இல்லத்தில் இருந்து கோமதியைச் சுமந்த வந்த கதையைக்கூறி, ஓர் இரும்புப் பெட்டியை அறிவுச்செல்வனிடம் நீட்டினார். அவன் பெட்டியைத் திறந்தான்; பித்துப்பிடித்தவனாகப் பிதற்றினான். அவன் குழந்தைப் பருவத்தில் வைத்து விளையாடிய சிறுசிறு பொருள்கள் எல்லாம் பத்திரப்படுத்தப்பட்டு இருந்தன. மரப்பொம்மை, கையில் அணிந்திருந்த வளையல்கள்... இவை எல்லாம் அவனை நோக்கி ஏதோ சொல்லின....

*-சரித்திரா, 2HT*

## மழை!



*இயற்கையின்*
*அன்பளிப்பு!*
*இறைவனின்*
*புதுப்படைப்பு!*
*தாவரங்களுக்குப்*
*பசுமைச் சாயம் பூசும்*
*வான மன்தர்கள்!*
*ஜீவராசிகளின்*
*தாகம் தீர்க்கும்*
*அமிழ்த ஊற்றுகள்!*
*கோடை வெப்பம் தணிக்கும்*
*குளிர் தேவதைகள்*
*விண்ணுக்கும் மண்ணுக்கும்*
*விரைந்தோடும் விருந்தாளிகள்!*

*(உயர்நிலை 3 தமிழிலக்கிய வகுப்பில் எழுதப்பட்ட கவிதை)*

## தடுக்கி விழுந்தால்...

தூக்கிவிடுவது
**தாத்தா தலைமுறை!**

கண்டுகொள்ளாமல்
போவது
**அப்பா தலைமுறை!**

நின்று 'செல்பி' எடுப்பது
**நமது தலைமுறை!**

## படித்ததில் பிடித்தது!



## நான் செய்த நற்செயல்

வாழ்வில் அனைவரும் நிறைய நற்செயல்கள் புரிந்திருப்பர். அந்த நற்செயல் நமக்கும் மற்றவர்களுக்கும் ஏதாவதொரு விதத்தில் மகிழ்ச்சியை அளித்திருக்கும். அப்படி என்னையும் மற்றவர்களையும் மகிழ்ச்சியில் ஆழ்த்திய ஒரு நற்செயலைப் பற்றியே இக்கட்டுரை அமைகின்றது.

சென்ற ஆண்டு பள்ளி இறுதி நாள் அன்று, நான் பேருந்து நிறுத்தும் இடத்தில் வழக்கம்போல் பேருந்திற்காகக் காத்துக்கொண்டிருந்தேன். வெகுநேரமாகியும் பேருந்து வராததால் எரிச்சலுடன் முனங்கியவாறு சாலையை வெறித்துப் பார்த்துக்கொண்டு இருந்தேன். அப்போது நான் ஏறவேண்டிய பேருந்து வந்தது. நான் பெருமூச்சுவிட்டவாறு பேருந்தில் ஏறினேன். அமர்வதற்கு இருக்கை தேடினேன். என் கண்களுக்கு எதுவும் தென்படவில்லை. நான் ஓர் ஓரமாக நின்றேன். எனக்குப் பக்கத்தில் ஒரு மூதாட்டியும் கைகளில் பைகளுடன் தள்ளாடிக்கொண்டு நின்றுகொண்டிருந்தார். அதைப் பார்த்தபோது எனக்குப் பரிதாபமாக இருந்தது. முதியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட முன்னுரிமை இருக்கையில்கூட இளையர்கள் அமர்ந்திருப்பதைக் கண்ட எனக்கு வெறுப்பு ஏற்பட்டது.

நான் அந்த மூதாட்டிக்கு உதவும் வகையில், அவர் கைகளில் இருந்த பைகளை வாங்கினேன். எனக்கு நன்றி கூறிய அவர் முகத்தில் ஏற்பட்ட ஆனந்தம் என் மனத்தை நெகிழ வைத்தது. பிறகு, நான் அருகிலிருக்கும் இருக்கையில் அமர்ந்திருந்த சிறுமியிடம் மூதாட்டிக்கு இடம் கொடுக்க முடியுமா? என்று வினவினேன். அவளும் இருக்கையை விட்டுக்கொடுத்தாள். நாங்கள் இருவரும் அவளுக்கு நன்றி கூறினோம். பின்னர் மூதாட்டி இறங்கும் இடம் வந்தது. நானும் அந்த நிறுத்தத்தில் இறங்க வேண்டியிருந்ததால், அவரைப் பத்திரமாக இறக்கி விட்டதோடு, அவரது பைகளைத் தூக்கிக்கொண்டு அவர் வீடு வரைக்கும் சென்றேன். அவர் எனக்கு மீண்டும் நன்றி கூறியதோடு, குளிர்பானமும் தந்தார். அவரிடம் விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்குக் கிளம்பினேன்.

இன்று ஒருவருக்கு உதவிக்கரம் நீட்டினேன் என்ற மனமகிழ்ச்சியில், வீட்டை நோக்கிப் புறப்பட்டேன். வீட்டில் என் தாயார் என் வரவுக்காக வழிமேல் விழிவைத்துக் காத்துக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் கோபக்கனல் தெரிந்தது. நான் நடந்ததை என் தாயாரிடம் விளக்கினேன். அவர் முகத்தில் புன்னகை மலர்கள் பூக்கத் தொடங்கின. எனக்குப் பாராட்டுப் பரிசு கிடைத்தது. மற்றவர்களுக்கு உதவும் பண்பு நல்லது என்பதையும் என் தாயார் எனக்கு எடுத்துரைத்தார். நான் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினேன். அதுமட்டுமல்லாமல் உதவி தேவைப்படும் ஒருவருக்குச் செய்த இச்சேவை என் மனத்தில் மகிழ்ச்சியையும் நிம்மதியையும் ஏற்படுத்தியது.

*-பூர்வசந்தியா 1HT1*

## மொழி



*சொற்களால்*
*செதுக்கப்பட்டது*
*இலக்கணத்தால் இணைக்கப்பட்டது*
*இலக்கியத்தால் உச்சந்தொட்டது*
*ஓசைகளால் ஒழுங்குபட்டது*

*வள்ளுவரால் ஞானம் பெற்றது*
*பாரதியால் வீரம் பெற்றது*
*கம்பரால் இமயம் தொட்டது*
*ஔவையால் அறிவு பெற்றது*

*தாய் மடியின் பிறப்பின் அது தாரக மந்திரம்*
*தரணியின் வாழ்வில் அது நம் அடையாளம்!*

*தாய் மண்ணைப் பிரிந்தாலும்*
*தமிழே மறந்து போகாதே!*
*அப்படி மறந்துவிட்டால் - தமிழா!*
*நாளை நீ பேசப் போவது தமிழா?*
*-சஞ்சனா, JC2-NETP*

## தந்தை சொல்லே மந்திரம்!



**தந்தை சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்! ஏனென்றால்...பிறர் நமக்கு ஏதும் சொல்லும் நிலை வந்துவிடக் கூடாது. தந்தையின் வாழ்க்கை அனுபவங்கள் நமக்கு ஒரு புத்தகம் ஆகும். அதன் ஒவ்வொரு பக்கத்தையும் பாடமாகக்கொண்டு பயனடையுங்கள்!**

## வாழ்க்கை

நமது அனுமதியில்லாமல் - நாம்
இந்த வாழ்க்கையில் திணிக்கப்பட்டுள்ளோம்.

இது சொர்க்கத்திற்குப் போகும்
நேரடிப் பாதையா?-அன்றி
ஒரு புதையலைத் தேடிச் செல்லும்
கரடுமுரடான காட்டுப் பாதையா?

இயந்திரமாக வாழ்ந்து கொண்டிருக்கும் நாம்
எந்தவொரு விதிமுறையுமின்றி வந்தோம்

சரியாக வாழ்கிறோமா? வாழ்வில் சரி,தவறு
இருக்கிறதா?
அதைத் தீர்மானிப்பதுதான் யாரோ?

வாழும்போது நம் குடும்பத்திற்காக
வாழ்கிறோமா?
அல்லது ஊருக்கு வணங்கி வாழ்கிறோமா?

நமது சொந்த மகிழ்ச்சியும் நலனுந்தான்
முக்கியமா?
அல்லது பிறர் நலம் கருதுவது அவசியமா?

போட்டியும் பொறாமையும் நிறைந்த உலகில்
எதுதான் மகிழ்ச்சி?
நம்மை நாமே கவனித்துக் கொள்வது சுயநலமா?

அதுதான் தவிர்க்க முடியாத நமது முக்கியக்
கடனா?
அல்லது அனைத்தையும் பிறருக்காக இழப்பது
முறையா?

உறவுகள் எத்தனையோ வந்து போகின்றன-
அவை
என்றும் நம்மிடம் உண்மையாய் இருப்பதில்லை.

இந்நிலை உள்மனத்தில் உளி அறைந்தாலும்
இறுதிவரை இதை நினைத்து உருகுவதில்
சிறிதும் அர்த்தமில்லை.

வாழ்க்கை ஒரு வட்டம்!
தொடக்கமும் முடிவும்
அனைத்திற்கும் உண்டு.

வாழும்வரை இதை நினைவில்
கொண்டு செயல்படுவோம்!
என்றென்றும் 'நம்மை' ஒன்றே
எண்ணி...நடைபோடுவோம்!

மற்றதை மறந்துவிட்டு
மகிழ்வு கொள்வது
வாழ்க்கைக்கு நிச்சயம்
அர்த்தம் சேர்க்கும்!!

*-சகானா நாயுடு, JC2-NETP*

## facebook செய்தி



ஒரு நாள் சாவியைப் பார்த்துச் சுத்தியல் கேட்டது. "உன்னைவிட நான் வலிமையானவனாக இருக்கிறேன். ஆனாலும், ஒரு பூட்டைத் திறக்க நான் மிகவும் சிரமப்படுகின்றேன். ஆனால், நீ சீக்கிரம் திறந்து விடுகிறாயே அது எப்படி?"

அதற்குச் சாவி சொன்னது, "நீ என்னைவிட பலசாலி என்பதை நான் நிச்சயம் ஒத்துக்கொள்கின்றேன்.

நீ பூட்டைத் திறக்க, அதன் தலையில் அடிக்கின்றாய்! - ஆனால் நானோ,

பூட்டின் இதயத்தைத் தொட்டுத் திறக்கின்றேன்." என்றது.

'அன்பு உலகை ஆளும்' என்பது உலக நியதி. உணர்ந்து நடப்போம்!

**அன்பு உலகை ஆளும்!**

## உங்களுக்குத் தெரியுமா?

**திருக்குறள் தமிழின் முதல் எழுத்தான 'அ' என்ற உயிர் எழுத்தில் தொடங்கி மெய்யெழுத்தின் இறுதி எழுத்தான 'ன்' என்பதில் முடிவடைகின்றது.**

**அம்மா என்ற சொல்லில் 'அ' என்பது உயிர் எழுத்து. 'ம்' என்பது மெய்யெழுத்து. 'மா' என்பது உயிர்மெய் எழுத்து. தமிழின் எல்லா எழுத்து வகையும் 'அம்மா' என்ற சொல்லில் உள்ளது.**

**கேடில் விழுச்செல்வம் கல்வி! - திருவள்ளுவர்**